**செய்தி வெளியீடு எண்:600** **நாள்: 13.09.2017**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (13.9.2017) முதலமைச்சரின் முகாம் அலுவலகத்தில், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தால் தெரிவு செய்யப்பட்டுள்ள 1013 உதவி மருத்துவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, 10 நபர்களுக்கு உதவி மருத்துவர் பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

அரசு மருத்துவமனைகளில் ஏற்படும் காலிப் பணியிடங்கள் மற்றும் புதியதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்களை உடனுக்குடன் நிரப்பி, அரசு மருத்துவ நிலையங்களுக்கு வரும் ஏழை எளிய மக்களுக்கு தங்கு தடையின்றி மருத்துவ சேவை வழங்கப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காக, இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கென தனியாக மருத்துப் பணியாளர் தேர்வு வாரியம் ஜனவரி 2012–இல் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் துவக்கப்பட்டது. இவ்வாரியம், இதுவரை 9,777 மருத்துவர்கள் மற்றும் சிறப்பு மருத்துவர்கள், 9,190 செவிலியர்கள் உட்பட 22,042 பணியாளர்களை தேர்வு செய்துள்ளது.

மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் தற்போது 1013 உதவி மருத்துவர்களை புதியதாக தேர்வு செய்துள்ளது. இவர்களுக்கான பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று முதலமைச்சரின் முகாம் அலுவலகத்தில் 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி பேசியதாவது:

‘‘இன்றைக்கு, புதிதாக பணியில் சேர்ந்திருக்கின்ற மருத்துவர்களுக்கு பணி ஆணையை வழங்குகின்ற இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு, வரவேற்புரையாற்றிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்களே, நிகழ்ச்சியில் பங்குபெற்றிருக்கின்ற தலைமைச் செயலாளர் அவர்களே, துறைச் செயலாளர் அவர்களே மற்றும் இந்த துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகளே, மருத்துவ ஆணை பெற்றிருக்கின்ற மருத்துவர்களே, உங்கள் அனைவருக்கும் பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்து, மாண்புமிகு

அம்மாவினுடைய அரசு, இன்றைக்கு சுகாதாரத் துறையிலே சிறந்த சேவையை செய்து கொண்டிருக்கின்றது. இந்தியாவிலேயே, மருத்துவத்துறையில் தமிழகம்தான் முதன்மை வகிக்கின்ற அளவிற்கு சிறப்பான மருத்துவர்களால் சேவையாற்றப்பட்டு வருகின்றது. புதிதாக ஆணை பெற்றிருக்கின்ற மருத்துவர்கள் கிராமப்புறத்திலே சேவை செய்து, கிராமப்புறத்தில் வாழ்கின்ற ஏழை, எளியோருக்கு சிறப்பான முறையிலே சிகிச்சை அளித்து மக்கள் போற்றுகின்ற அளவிற்கு உங்கள் பணி அமைய வேண்டும் என்று வாழ்த்தி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்'' என்று வாழ்த்தினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., மருத்துவப் பணியாளர் தேர்வு வாரிய தலைவர் (பொறுப்பு) திரு. மோகன் பியாரே, இ.ஆ.ப., உணவு பாதுகாப்புத் துறை ஆணையர் திருமதி பி. அமுதா, இ.ஆ.ப., மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் எட்வின் ஜோ, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர் டாக்டர் கே. குழந்தைசாமி, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் (பொறுப்பு) டாக்டர் பி. பானு, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் (இ.எஸ்.ஐ.) டாக்டர் இன்பசேகரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 13.9.2017**